உ

கடவுள் துணை

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-ருஉ.] துன்முகி ஞு—ஆனிமீ [பகுதி-அ.
Vol. 52. June-July—1956. No. 8.

உள்ளுறை

பல்யானைச் செல்கெழு குட்டுவன்: 225
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

சங்க காலத்தில் தமிழ் வளர்ந்த முறை: 238
டாக்டர் மா. இராசமாணிக்கனார்

மொழியாராய்ச்சி: 242
ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை

தமிழ் இனம்: 246
டாக்டர் மா. இராசமாணிக்கனார்

மதிப்புரை: ஷை 254

பிழை திருத்தம்: 256
பண்டித. சித. நாராயணசாமியார்

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.
வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1956.

"செந்தமிழ்" ஆசிரியர் குழு:

1. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை
   தியாகராசர் கல்லூரி, மதுரை. (தலைவர்)

2. திரு. பேராசிரியர், செக்காவலர், ஆ. கார்மேகக்கோனார், மதுரை.

3. டாக்டர். மா. இராசமாணிக்கனார் M. A. M. O. L. L. T Ph. D.
   தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

4. திரு. பேராசிரியர், பி. ஜோதிமுத்து M. A., B. D.
   தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

5. திரு. நா. அப்பனையங்கார், ஆசிரியர், தமிழ்ச் சங்கம், மதுரை.

6. திரு. முகம்மது சுல்தான் அவர்கள், M. A. B. L.
   வழக்குரைஞர்-மதுரை.

7. திரு. வி சண்முகசுந்தரம் அவர்கள், M. A. B. L.
   செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்,
   அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

8. திரு. கி. பழநியப்பன் அவர்கள்.
   தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை.

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி–ருஉ.]	துன்முகி வூ–ஆனிமீ	[பகுதி–அ.
Vol. 52.	June-July—1956.	No. 8.

பல்யானைச் செல்கெழு குட்டுவன்

(224-ம் பக்கத் தொடர்ச்சி.)

சித்தாந்த கலாநிதி-பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை, மதுரை.

இவ் விழாவைச் சிறப்பித்துக் கோதமனார் இனிய பாட்டொன்றைப் பாடினார். அதன்கண், குட்டுவனுடைய நாட்டில் பல்வகைத் திணைவளங்களையும் எடுத்தோதினார். நெய்தற் பகுதியில் கடற்கரையை ஒட்டிக் கழிகள் உள்ளன; அவற்றில் நெய்தல் மலர்ந்திருக்கும்; கரையோரங்களில் ஞாழல் மரங்கள் நிற்கின்றன. கழியில் மீன் வேட்டம்புரிந்த புள்ளினம் கழிக்கானலில் நிற்கும் புன்னையில் வந்து தங்குகின்றன. கடல் அலைகள் சங்குகளையும் பவழக் கொடிகளையும் கொணர்ந்து கரையில் ஒதுக்குகின்றன. சங்குகள் ஒலிக்க அவற்றின் முத்துக்களையும் ஏனைப் பவழக் கொடிகளையும் நெய்தலில் வாழ்வோர் எடுத்துக்கொள்கின்றனர். ஒருபால் குறிஞ்சி நிலத்தூர்கள் உள்ளன. அங்கே அழகிய கடைத்தெருக்கள் காணப்படுகின்றன. கடைகளில் காந்தட்கண்ணி சூடிவரும் கொலைவில் வேட்டுவர் தாம் கொணரும் ஆமான் இறைச்சி, யானைக்கோடு ஆகியவற்றைத் தந்து அவற்றிற்கீடாகக் கள்ளைப் பெறுகின்றனர். கடைக்காரர் அவற்றைப் பிறநாட்டவர்க்குப் பொன்னுக்கு மாறுதலால் கடைகளில் பொன்மிகுந்து பொலிகின்றது. மற்றொருபால் மருத நிலம் காணப்படுகிறது. அங்குள்ள ஊர்

களில் மருதமரங்களை வேருடனே சாய்த்து வரும் புது வெள்ளத்தை மணல்மூடைகளைப் பெய்து அணைகட்டும் மக்கள் மணற்கரை நீர்ப் பெருக்கால் கரைந்துகுவது கண்டு ஆரவாரிக்கின்றனர். ஒரு பக்கம் ஊர்களில் விழாக்கள் நடைபெறுகின்றன. மக்கள் பலர் விழாப்பொலிவு கண்டு தம் சிறார்க்குச் செல்கின்றனர். அவ் விழாக்காலத்தில் கரும்பின் அரிகாலில் காலமல்லாத காலத்திற் பூக்கும் பூக்கள் மலிந்துள்ளன. மற்றொருசார், வரகுவைக்கோலால் கூரை வேய்ந்த வீடுகள் நிறைந்த புன்செய்நிலப் பகுதி காட்சி தருகிறது. அங்கே வாழ்பவர் தம்பால்வரும் விருந்ினர்க்குத் தினைமாவைத்தந்து ஓம்புகின்றனர். ஒருபால், ஈரமின்மையால் பூக்கள் வாடி உதிர்ந்து நிலமும் பயன்படும் தன்மை திரிந்து மணல்பரந்து பொலிவின்றியிருக்கிறது. எங்கும் மணலும் பரலும் பரந்து பூழி நிறைந்து நிற்கும் பகுதியில் மகளிர் காலில் செருப்பணிந்து திரிகின்றனர். இந் நிலங்களில் வாழும் வேந்தரும் குறுநில மன்னரும் நின் பெருஞ்சோற்று விழாவில் எழும் முரசு முழக்கம் கேட்டு உள்ளம் கலங்கி உலமருகின்றனர். வலிய அரண்பெற்றும் மனத்திட்பம் இல்லாமையால் அவர்கட்கு நின் விழா முழக்கம் மிக்க அச்சத்தை உண்டுபண்ணுகிறது[1]" என்று இவ்வாறு கோதமனார் கூறினர்.

அகப்பாவை வென்றது முதல் குட்டுவனது புகழ் நாடெங்கும் காட்டுத்தீப்போல் பரவத் தலைப்பட்டது. அதனால் சோநாட்டுவாழ்வு சிறப்புடன் இயங்கிற்று. போர் இல்லாமையால், மறவர்கள் தத்தம் மனைகளில் இருந்து தமக்குரிய தொழிலைச் செய்துவந்தனர். வினைகருதியும் பொருள் கருதியும் பிரிந்துறையும் பிரிவுநிலை அவர் தம் மனைவாழ்வில் நிகழவில்லை; எல்லா மனைகளிலும் புலம்பா வுறையுள் வாழ்க்கையே[2] மலிந்திருந்தது. தானைவீரர் சிலர் வெறிதே மடிந்திருந்தனர். பிறநாடுகள் வறங்கூர்ந்து பெரிதும் வருந்திய போதும்

[1] பதிற். 30. [2] பதிற். 28.

குட்டநாட்டிற் பாயும் பேரியாறு விடாளை நிறையப் பெருகிப் புலங்களில் பரந்து தண்ணென்னுமாறு காட்டுப் பூக்களைச் சுமந்து வந்து பாய்தலில் தப்பாதாயிற்று. அதனைத் தடுத்து நிறுத்து வயல்களில் தேக்குங்காலத்தில் உழவர் செய்யும் பூசலொன்றே நாட்டில் விளங்கித் தோன்றிற்று. இதனால் குட்டுவன்நாடே திருவுடையதெனப் பாராட்டப் படுவதாயிற்று. இந்த நலத்தைக் கோதமனார் அழகியதொரு பாட்டாகப் பாடி வேந்தனை இன்புறுத்தினார்.[1]

இவ்வாறு இருக்கையில் சேரநாட்டுக்குக் கிழக்கில்உள்ள கொங்கு நாடு குட்டுவன் முன்னோர் காலத்தே சேரவேந்தர் ஆட்சியில் இருந்ததெனினும் அங்கே இருந்து நாடுகாவல்புரிந்த வேந்தர் சிலர் அயலில் இருந்த குறுநிலத்தவர் சிலரைத் துணையாகக்கொண்டு[2] பாலைக்காட்டு வழியாகக் குட்டநாட்டிற் புகுந்து அரம்பு விளைத்தனர். குட்டுவரும் பூழியரும் நிறைந்த பெரும்படை யொன்றைக் கொண்டு கொங்கு நாட்டுக் குறும்பர்களை வெருட்டிச் சென்று அவரது கொங்குநாட்டைக் கைப்பற்றித் தன் ஆணைவழி நிற்கப்பண்ணினான் குட்டுவன். கொங்கு நாடு கீழ்கொங்கு மீகொங்கு என இருவகையாக இயலுவது. கீழ் கொங்கு இடைக்காலக் கல்வெட்டுக்களில் கிழங்குநாடு எனப் பிழைபடக் குறிக்கப்படுகிறது. கீழ்கொங்கிற்கு அந்நாட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி யோடிக் காவிரியொடு கலக்கும் ஆன்பொருநையாகிய அமராவதியாறு கீழெல்லையாகும். அதன் மேலைக் கரையில் உள்ள பேரூராகிய தாராபுரம் அந்நாளில் வஞ்சி யென்ற பெயருடன் சேரரால் அமைக்கப்பெற்றது. அதனால் அதனைக் கொங்கு வஞ்சி யென்று பெயர் குறிப்பாராயினர். இடைக்காலச் சோழர் காலத்தே அது இராசராசபுரமாகி இப்போது தாராபுரமாய்க் காட்சியளிக்கிறது. சேரவேந்தர் குடியினர் சிலர் அங்கே இருந்து அரசுகாவல் ஆற்றி வந்தனர்.

---

[1] பதிற். 28. [2] இதனைப் பாலைக்கோடு என்றும் சில கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

அந் நாளில் கொங்குநாடு நீர்வளமின்றி முல்லை நலமே சிறந்து நின்றது. அதனால் அங்கு வாழ்ந்தவர் அனைவரும் ஆகாத் தோம்பும் ஆயர்களாகவே இருந்தனர். அதனால் கொங்கரை, "ஆகெழு கொங்கர்" என்பது பெருவழக்காகச் சான்றோர் செய்யுட்களில் காணப்படுகிறது. கொங்கு நாட்டில் காவிரியின் வடகரைப் பகுதி மழநாடு என விளங்கிற்று; அந் நாட்டவர் மழவர் எனப்பட்டனர். மழநாட்டு மழவர் பலர் தெற்கேயுள்ள கீழ்கொங்கு நாட்டிற் படர்ந்து குடியேறி இருந்தனர். அவர்கள் மறப்பண்பு சிறந்திருந்தமையின், கீழ்கொங்குநாட்டிலும் அதற்குக் கிழக்கிலுள்ள வையாவி நாட்டிலும் வாழ்ந்த வேளிர்கள் அவர்களைத் தானைமறவராகக் கொண்டிருந்தனர். கொங்கு நாட்டைச் செல்கெழு குட்டுவன் அகப்படுத்தபோது அங்கு வாழ்ந்த மழவர்களும் அவன் ஆணைவழி நிற்பாராயினர்; அவர்கள் சேரனுக்குத் தானைமறவராய் நின்று அவன் ஆதரவைச் சிறக்கப்பெற்றனர். குட்டுவனும் "மழவர் மெய்ம்மறை" என்ற சிறப்பைப் பெற்றான்.

தென்னம் பொருப்பின் முடியில் தோன்றி யோடும் பேரியாற்றின் கரையில் நேரி மலை அயிரை மலை என இருமலைகள் உள்ளன. நேரி மங்கலத்துக்கு எதிரே நிற்பது நேரிமலை. நேரிமங்கலம் முன்னாளில் சேரமன்னர் வந்து தங்கிய சிறப்புடையது; அவ் வூர்க்கண் பழங்காலக் குறிப்புக்கள் பல இன்றும் காணப்படுகின்றன. அம் மலைக்குத் தென்கிழக்கில் நிற்கும் மலை அயிரை எனப்படுகிறது; அதன்கண் தோன்றி மேற்கே ஓடும் காட்டாற்றுக்கு அயிரையாறு என்பது இன்றும் வழங்கும்பெயர். அம்மலைக்கண் பண்டைத் தமிழ்வேந்தரான சேரமன்னர் கொற்றவை நிறுவி வழிபாடு செய்வது மரபு. யானைகளின் மருப்புக்களால் அமைக்கப்பட்ட கட்டிலின்மேல் கொற்றவையை எழுந்தருள்வித்துக் குருதிப்பலிதந்து அவ்வழிபாடு செய்யப்படும். அதனால் அப்பகுதி இந்நாளில் தேவிகுளம் என்ற பெயர் தாங்கி நிற்கிறது. பண்டையோர் முறைப்படி செல்யானைக் குட்டுவன் வஞ்சிநகர்க்கணிருந்து அயிரைமலைக்குத் தன் அரசியற் சுற்றத்தோடுசென்று கொற்ற

வையை வழிபட்டான். அந் நாளில் கீழ்க்கடல் சோழ பாண்டியர்க்கும் மேலைக்கடல் சேரர்க்கும் உரியவாயிருந்தன. இருகடல் நீரையும் ஒரு நாளிற் கொணர்ந்து நீராடி வழிபாடு செய்வது முறை யென்று அறிந்தோர் கூறினர். அக் காலத்தே இன்றுபோல் வாய்த்த போக்கு வரவு வசதி இல்லை; ஆயினும் கீழ்கடற்கும் மேலைக்கடற்கும் வலிய களிற்று யானைகளை அஞ்சலுக்கேற்ப நிரல்பட நிறுத்தி ஒருபகலில் இருகடல் நீரும் கொணருமாறு குட்டுவன் ஏற்பாடு செய்தான். இவ்வாறு செய்ததனால் இவன் இருகடல் நீரும் ஒருபகல் ஆடினோன் என்ற சிறப்புக்குரியனானான். இதனைப் பதிகம்,

> "கருங்களிற் றியானைப் புணர்நிரை நீட்டி
> இருகடல் நீரும் ஒருபகல் ஆடி
> அயிரை பரைஇய"

ஆற்றல் சான்றவன் என்று கூறுவதாயிற்று,

பல்யானைச் செல்கெழு குட்டுவன் உம்பற் காட்டைத் தன்கோற் கீழ் கொணர்ந்து அகப்பாவை வென்று முதியர்களைத் தனக்கு உரியவர்களாக்கிக் கொண்டதும் கொங்குநாட்டை வென்று மழவரைத் தழீஇக் கொண்டதும் தன் முன்னோர் காட்டிய முறைப்படி அயிரையிலுள்ள கொற்றவையைப் பரவியதும் அவனது போர்ப் புகழ்க்கு அசையா அடிப்படையை வகுத்தன. அவன் உள்ளத்தெழுந்த வேட்கையும் ஒருவாறு தணிவதாயிற்று. இவற்றை நேரிற்கண்டு மகிழ்ந்த பாலையூர்க் கோதமனார்க்கு அவன் உள்ளத்தைப் போர்த்துறையிலிருந்து நீக்கி வேள்வித் துறையிற் செலுத்தி மேலுலக வாழ்க்கைக்கு உரியனாகச் செய்யவேண்டுமென்ற எண்ண முண்டாயிற்று. அப்போது குட்டுவன் அவைக்களத்தே இருந்து அவனுக்குப் புரோகிதனாகப் பணிபுரிந்து வந்த நெடும்பாரதாயனார் துறவுள்ளத்தால் தவம் செய்தற்குக் காடு செல்வாராயினர். துறவுபூண விரும்பினோரைத் தடுத்தல் அரசர்க்கும் இல்வாழ்வார்க்கும் முறையன்று. அதனால் வேந்தன் அவர்க்கு வேண்டுவனசெய்து வழிவிட்டான். எனினும், அவன் உள்

ளம் அவனது பிரிவாற்றாது பெரிதும் வருந்திற்று. அவனது ஆற்றாமையைப் பற்றுக்கோடாகக் கொண்ட கோதமனார் தமது கருத்தை முடித்துக் கொள்ளலானார்.

செல்கெழுகுட்டுவன் செவ்விய மனத்தனாயினும், பகைத்துவந்த வேந்தரைக் கெடுப்பதிலும் அவர் நாட்டை அழிப்பதிலும் கண்ணோட்டமின்றி யிருப்பதை முதற்கண் மாற்றவேண்டியது கோதமனார்க்குப் பணியாயிற்று. ஒருகால் அவர் தமது பாலையூர்க்கும் அதனை அடுத்திருந்த நாடுகட்கும்சென்று திரும்பினார். வழியில் குட்டுவனோடு பகைகொண்டு அழிந்த வேந்தர் நாடுகளையும் கண்டார். தாம் கண்டவற்றை ஒரு பாட்டாற் கூறலுற்று,

> போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ,
> நின்னயந்து வருவேம் கண்டனம்

என்று தொடங்கி, நின் வலிமிக்க புகழ்நலத்தை யறியாமையால் போர் எதிர்ந்து கெட்ட வேந்தர்களின் வளம்நிறைந்த நாடுகள் அழிந்து "விண்ணுயர் வைப்பின் காடாயின" (பதிற், 23) என்று பாடினார். அது கேட்டு உவகைமிக்க குட்டுவன் அவர் வேறே என்ன கூறப்போகிறார் என்ற அவாவுடன் அவரை நோக்கினான். முரசுமுழங்கக் குதிரை பூட்டிய தேர்ப்படையைச் செலுத்திக்கொண்டு நீ போர்குறித்து அவர் நாடுகட்குச் சென்றபோது, நின் குதிரைப்படை சென்ற வயல்கள் உழவர்களின் கலப்பைகள் ஊன்றாதவாறு கெட்டன; யானையினம் பரந்த வயல்கள் வளம்படுதலின்றி அழிந்தன. படைமறவர் தங்கிய புலம் கழுதையுழுத களமாயின; அரசர்க்கு அரணாக நின்ற எயில்கள் இடிந்து ஒழிந்தமையால் வேறே காவலர் காவல் வேண்டாவாயின (பதிற். 25). இந்நாடுகளை இதற்குமுன்பு கண்டவர் இப்போது காண்பார்களாயின், பெரிதும் வருந்துவர்; எனக்கு அதனைக் கூறல் வருத்தமாகஇருக்கிறது; சுருங்கச்சொன்னால் அவை "கானுணங்கு கடுநெறி"யாகவும், நெருஞ்சிக் காடுறு கடுநெறி"யாகவும் மாறிவிட்டன எனல் பொருந்தும். (பதிற். 26) என்று கோதமனார் கூறினார். "மகிழ்ந்ததன்

தலையும் நறவுண்டாங்கு" அவனுக்கு உள்ளத்தே களிப்பும் போராண்மையில் வேட்கையும் மிகுந்தன.

மறக்களிப்பால் மறலி நிற்கும் குட்டுவன் மனத்தை அருளறத்தில் செலுத்தும் கருத்தினரான அவர் கூற்றுக்கள் போதிய பயனை விளைவிக்காது போகவே வேறு சமயம் நோக்கிக் கொள்ளலாம் என்று நினைந்து அவன்பால் விடைபெறலானார். அவனும் அவர் கருத்தறியானாய் மிக்க பொருள்நல்கி விடுத்தான்.

நாட்கள் சில சென்றன. வளமிக்க நாடொன்றில் தலைவன் பகை விளைத்தது காரணமாகக் குட்டுவன் போரொன்று உடற்றி அவனையும் தொலைத்து அவனுக்குத் துணைபுரிந்த நாட்டையும் அழித்து வென்றி சிறந்து விளங்கினான். அவனை அக்காலத்தே காணவந்தோருள் பாலைக் கோதமனாரும் ஒருவராவர். எல்லோரும் விடைபெற்றுச் சென்றபின் கோதமனாரும் குட்டுவனும் தனித்திருந்து சொல்லாடத்தொடங்கினர். அப்போது செல்கெழு குட்டுவன் போரால் எய்தும் வருத்தத்தையும், முடிவில் வெற்றி நல்கும் இன்பத்தையும் எடுத்துப் பேசினான். நாடாளும் வேந்தர் தம்மிற் பகைகொள்ளலும் ஒருவரோடொருவர் படைத்திரள் கொண்டு போர் செய்வதும் வெற்றி பெறுவதும் அரசியல் வாழ்வில் இயல்பாக இருப்பது உலகறிந்தசெய்தி; ஆயினும், வேந்தர்களின் சினம் காரணமாக நிகழும் போர்களால் யானை, குதிரை, வீரர் என்ற உயிர்வகைகள் எத்துணை இறந்துபடுகின்றன; எத்தனை வளம் மிக்க நாடுகள் அழிவுறுகின்றன என்பதை அவர்கள் எண்ணுவாராயின், உலகவாழ்வு மிக்க இன்பமாக இருக்கும் என்று பாலைக்கோதமனார் பரிவொடு பேசலாயினர். குட்டுவன் உள்ளமும் சிந்தனையில் ஈடுபடுவதாயிற்று. அதனைக் கண்டதும், "வேந்தே, நீ சினத்தால் கண்சிவந்து நோக்கினை. அதன் விளைவு என்னாயிற்று? அறிதியோ. நாடு முழுதும் சிதைந்தொழிந்தது, காண்" என்று தொடங்கி, சிதைந்த நாட்டின் சிறப்பை யான் அறிவேன்; யான் கூறுவதை அன்புகூர்ந்து விரும்பிக் கேள்! அந்நாட்டில் மக்களிடையே வருத்தமுண்டாதற்குரிய பகைமை

யும் விலங்குகளால் அச்சமும் வேறுவகையான கேடுகளும் உண்டாகாமையால் மக்கள் மனங்கலந்து இன்பவாழ்வு நடத்திவந்தனர். நெல் முதலிய பொருள்களை யேற்றிச் செல்லும் வண்டிகளின் உருளை வழியில் சேற்றிற் புதைந்துவிடின், அக்காலை வண்டியை இழுத்துச் செல்லும் எருதுகளை ஊக்குதற்காக உழவர்கள் எடுக்கும் பூசலன்றிப் பகைவரது போர்ப்பூசல் அங்கே தோன்றியது கிடையாது. தழையுடை உடுத்த இளமகளிர் இயவர் தங்கியிருக்கும் நீர்த்துறையில் உள்ள மருதமரத்திலேறி நெல் வயலிற் படியும் புள்ளினங்களைத் தம் இனிய குரலெடுத்து ஒப்புவர். வயலருகேயுள்ள சோலைகளில் வாழும் மயிலினம் அவர் குரலை இனிய பாட்டிசையாகக் கருதி ஆடுதலைச் செய்யும். தம்மினத்தை ஒப்புதற்கெடுத்த மகளிர் குரலைத் தம்பால் அன்புசெய்வான் எடுத்த இசையாகக்கருதி மகிழும் அத்துணை இன்பம் சிறந்தது அந்த நாடு. இப்போது, சிதைந்து ஒழிந்தது, காண் "(பதிற். 27) என்று கூறினார். அதனால் வேந்தனது உள்ளத்தே அருள் நினைவு தோன்றிற்று. அதனைக் குறிப்பால் உணர்ந்த கோதமனார் அந்த நாட்டை இப்போது காண்பவர், குட்டுவனுடைய தானை பரவிச் சென்று சிதைக்காமுன்,

"அழியா விழவின் இழியாத் திவவின்
வயிரிய மாக்கள் பண்ணமைத் தெழீஇ
மன்றம் நண்ணி மறுகுசிறை பாடும்
அகன்கண் வைப்பின் நாடுமன் அளிய" (29)

என்று கூறி இரங்குகின்றனர்" என்று இசைத்தார். குட்டுவன் மனம் குழைந்தது, கண்கள் கலக்க மெய்தின. "இனி இதற்கு யாது செய்வது?" என்பான் போல் அவன் அவரைக் கூர்மையாக நோக்கினான். அதனைக் கண்ட கோதமனார் வேந்தே நீ இதுகாறும் போர்த்துறையில் சென்று மறக்கள வேள்விகளே செய்து மேன்மை எய்தினாய்; இனி "அறம்புரியும் அந்தணர் வழி நின்று, ஞாலம் நின் வழி ஒழுக, (பதிற், 24) நீ வாழ்தல் வேண்டும்" என்றனர். அந்நாளில் அந்தணராகிய வேதியர்

"ஓதல் வேட்டல் அவைபிறர்ச் செய்தல்,
ஈதல் ஏற்றலென்று ஆறுபுரிந் தொழுகும்
அறம்புரி அந்தணர்"

என்று கூறப்பட்டனர். வேதியருள் துறவு நெறிக்கண் நின்றோரே அந்தணர் எனப்படுவர்; அதுபற்றியே "அறம்புரி அந்தணர்" என்றனர். ஏனை வேதியர் ஓதல் முதலிய ஆறும் செய்து மனையறம் புரிந்து ஒழுகுவர். அவரைப் பார்ப்பனர் என்பது பெருவழக்கு. அவர்கள் உலகியல் வாழ்க்கைக்குரிய உழவு, வாணிகம், போர் முதலிய தொழில்கள் செய்வதில்லை. அதனால் அவரை அறுதொழிலோர் என்பதும் பொருத்தமாயிற்று. அவர்கட்கு ஏனையோர் வாழ்க்கைக்கு வேண்டும் உணவும் உடையும் உறையுளும் தந்து ஓம்புவது இயற்கை. அவ்வாற்றால், அவர்கள் எப்போதும் ஓதுவதும் ஓதுவிப்பதுமாகிய தொழில்களைச் செய்துவந்தனர்; சிறப்புடைப் பொழுதுகளில் வேள்வி செய்வதும் செய்விப்பதும் மேற்கொண்டனர். அவர்கட்குப் பழம் பெருஞ்செல்வமாக இருந்தது வேதம். அது சார்பாக எழுந்த நூல்களையும் அவர்கள் வேதம் என்பர். வேதமொழி மிகவும் தொன்மைத்தாய் எங்கும் எழுதப்படாது கேள்வி வழியாக வந்துகொண்டிருந்ததேயன்றிப் பேச்சுவழக்கிலிருந்து நீங்கிவிட்டது. வேதியர்களும்தாம்தாம் சென்று தங்கிய நாடுகளில் வாழ்ந்த மக்கள்பேசிய மொழியையே தாமும் மேற்கொண்டனர். அது வேதமொழி மக்கள் வழக்கிற்கு வாராதவாறு அறவே விலக்கிவிட்டது. எனினும், வேதகால வேதியர்க்குப் பின்னோர் வேதமொழியினின்றும் சில சொற்களைமாற்றி நாட்டுமொழியிலுள்ள சொற்கள் சிலவற்றைக் கூட்டிச் சமற்கிருதமொழியை வடநாட்டில் கண்டனர். சமற்கிருதமொழி என்றாலே நன்றாகச் செய்யப்பட்ட மொழி என்பது பொருள். வடநாட்டவர் கண்டதுபற்றி, அது வடமொழி என்று தமிழரால் குறிக்கப்படுவதாயிற்று. வேதமொழி வடமொழியானபோதும் அஃது அறிஞர் கூட்டத்தில் ஒருவகைக் குழூஉ மொழியாக நிலவிற்றேயன்றி நெடுநாள்காறும் எழுதப் படாமலே இருந்தொழிந்தது. பின்னர் ஏனைநாட்டு மொழிகள் எழுதப்பட்டும் ஓதப்பட்டும் வந்தது கண்ட வடமொழியறிஞர் தமிழ்நாட்டிற் கீர்வாணம் அல்லது கிரந்தம் என்ற எழுத்துக்களைப் படைத்து வடமொழி நூல்களை எழுதுவாராயினர். பிறநாட்டுமொழிகளிலுள்ள எழுத்துக்களினூடே வடமொழிக்குரிய ஒலி யெழுத்துக்கு வேண்டும் வடிவெழுத்துக்களைப் படைத்தனர். அதனால்

இன்று தமிழ் ஒழிந்த ஏனைமொழிகளில் வடமொழி நூல்களை ஒலி மாற்றம் சிறிதும் இன்றி எழுதுவது எளிதாக இருக்கிறது. வட மொழியாளர் மேற்கொண்டிருக்கும் தேவநாகரி எழுத்து மராட்டிய மொழிக்குரியது என்பது அறிஞர்கள் நன்கறிந்தது.

எழுதா மொழியாக இருந்த வேதமொழி வடமொழி யென்ற சமற்கிருதமாய் எழுதும் மொழியாய் உருக்கொண்டபின் அரிய நூல்கள் பல தன்கண் தோன்றிப் பெருகுதற்குரிய வாய்ப்பினைப்பெற்றது. தாம் தாம் சென்று படர்ந்த நாடுகளில் அறிஞரிடையே நிலவிய உயர்ந்த கருத்தமைந்த அரிய நூல்கள் பலவும் வடமொழியில் எழுதப் படுவவாயின. மொழி நிலைமாறியபோதும் வேதியர் தம்முடைய தொழில் நிலையில் சிறு மாற்றமும் பெறுமையால், ஓதல் ஓதுவித்தல் என்பவை மொழியை வளர்த்தற்குப் பெருந்துணையும் ஆக்கமும் தந்தன. உலகியலைக்கடந்த மெய்யுணர்வுக்குரிய நூல்களையே முதலாகக் கொண்ட வடமொழி, உலகியல் வாழ்வுக்குரியபலவேறுதொழில்களையும் கலைகளையும் உரைக்கக்கூடிய நூல்களை இயல்பாகக் கொண்டிருக்க இடமில்லை. அவ்வந்நாடுகளிலிருந்த உயர்ந்த நூல்களெல்லாம் வடமொழியில் மாறி ஒரு சேமவைப்பில் அடங்கிய உயர்பொருள்போல ஒடுங்கி மறைந்தன. அதனால்தான், இன்று உயரிய கலையும் கல்வியும் கூறும் நூல்கள் பல வடமொழிக்கண் காணப்படுகின்றன; வடமொழியில் பழந்தமிழ்ச் சொற்கள் பல உள்ளன; இவ்வாறே வேற்றுமொழிச் சொற்கள் மிகப்பல வடமொழியில் சேர்ந்து நிறைந்துள்ளன என்று மொழிநூல் அறிஞர் எடுத்துரைக்கின்றனர்.

இவ்வண்ணம் காலவோட்டத்தில் பலவேறு மொழிகள் நல்கிய சொல்லும் பொருளுமாகிய உதவிபெற்று வளர்ந்துவந்த வடமொழி ஓரளவு இடம் பெற்றிருந்தகாலம் சங்ககாலம். அதனால் வேதியர்க்கு ஆகாவுநல்கி வேள்வி முதலியவற்றைச் செய்து அவர்கள் வழிமொழிந் தொழுகுதல் வேண்டுமெனக் கபிலர் முதலிய சங்ககாலச் சான்றோர் வேந்தர்களை வேண்டிக்கொண்டனர். அவ் வேதியர்வழி வேந்தர் ஒழுகினால் நாட்டுமக்கள் அவர்களை வழிநின்று ஒழுகுவர்; அது பற்றியே "அறம்புரி அந்தணர் வழிமொழிந் தொழுகி ஞாலம் நின்வழி யொழுக" ஆட்சிபுரிக எனச் சேரமானுக்கு உரைக்கின்றார். அரசியற் சூழலிலும் மக்கள் வாழ்விலும் நுழைந்து கலக்கத்தை விளைவிக்காமல் ஓதல் முதலிய தொழில்களால் மொழிவளர்க்கும் பெரும்பணி

யினும் மறவேட்கைமிக்க மக்கள் உள்ளத்தை அருள் நெறியிற் செலுத்துவதிலும் ஈடுபட்டிருந்தமையின், வேதியர்களின் உரைக்குச் செவிசாய்த்த சேரமன்னனான செல்கெழு குட்டுவன் தானும் வேள்வி செய்வதற்குச் சிந்தை செய்வானாயினன்.

வேள்வியென்பது உலகியல் முறையிற் கூறினால் வேதியர் பலரைக் கூட்டிப் பெரியதொரு விருந்து நடத்தி, வேதப் பயிற்சியின் வீறுகண்டு மிக்க பரிசில் நல்கும் விழா என்று கூறுவது மிகையாகாது. வேள்விக்கண் பெருத்த அளவில் நெய் பெய்து தீ வளர்ப்பது சிறப்பு; அதன்கண் எழும் புகை வானத்திற் படிந்து மேகமாகி மழை வளம் நல்கும் என்பது அவர் தம் கொள்கை. வேள்வி பல செய்தவர் மறுமையில் விண்ணுலகு புகுந்து வேந்தராய் வீற்றிருப்பர் என்பது வழக்கு. அதனால் அரசர்க்கு அரசுக்கோ நாட்டுக்கோ தீங்கு நிகழாது. புகழே மிகுந்தமையின் அந்நாளில் வேந்தரும் செல்வரும் வேதியரை வேள்வி செய்வித்தனர். குட்டுவனும் வேதியர் பல்லாயிரவரைக் கொண்டு வேள்வி வேட்பிக்கலானான். பிறவுயிர்கட்குத் தீங்குநினையாத கொள்கையும் என்றும் தப்பாத வாய்மைமொழியும் கொண்டு சொல், பொருள், சோதிடம், வேதம், ஆகமம் என்ற ஐந்தனையும் நன்குணர்ந்து உயர்ந்த சான்றோர் துணை செய்ய அவ் வேள்வி நடைபெற்றது. வேள்வித் தீயின் சுடர்கண்டவழி வேந்தர் உள்ளத்தெழுந்த விருப்பமிகுதி அவனுடைய மெய்யில் பூரித்து விளங்கிற்று.

அதனைக் கண்டு வியந்த பாலையூர்க் கோதமனார்

"சொற்பெயர் நாட்டம் கேள்வி நெஞ்சமென்று
ஐந்துடன் போற்றி அவைதுணை யாக
எவ்வம் சூழாது விளங்கிய கொள்கைக்
காலை யன்ன சீர்சால் வாய்மொழி
உருகெழு மரபின் கடவுட் பேணியர்
கொண்ட தீயின் சுடரெழு தோறும்
விரும்புமெய் பரந்த பெரும்பெயர் ஆவுதி" (பதிற். 21)

என்று பாடுகின்றார். வேந்தனைப்போலவே நாட்டின்கண் வாழும் வணிகரும் பிறரும் தம்பால் வரும் விருந்தினர்க்குப் பேரன்புடன் ஊன் கலந்த நல்லுணவு தந்து உண்பிக்கும் விருந்தாகிய வேள்வியினைச்

செய்கின்றார்கள். விருந்தினர் பொருட்டு உருக்கிப் பெய்யப்படும் நெய்யின் புகை இனிய மணம் கமழ்கிறது. இருவகை வேள்வியிடத்தும் எழும் புகை வானுலகத்தோர்க்கும் விழைவுண்டாக விளங்குகின்றன என்பர்.

இவ்வாறு வேள்வி நலம் சிறப்ப, நாட்டில் வாழும் நன் மக்கள்,

"தீதுசேண் இகந்து நன்றுமிகப் புரிந்து
கடலும் கானமும் பலபயம் உதவப்
பிறர்பிறர் நலியாது வேற்றுப்பொருள் வெஃகாது

மையில்லாத அறிவினராய்ச் செவ்விதின் நடக்கின்றனர். மனைவாழ்வில் பொருளும் வினையும் குறித்துப் பிரிந்தொழுகுதல் வேண்டாமையால் துணைவரைப் பிரிவது இல்லையாகவே, யாவரும் பாத்துண் உண்டு, உலகில் நெடுநாள் வாழ்ந்து மூத்துக் கழிகின்றனரே யன்றி வாழ்வின் இடையே இறந்து படுவது இலர்[1]

குட்டுவனது வாழ்வில் நிகழ்ந்தவற்றைக் கோதமனார் அவ்வப்போது அழகிய பாட்டுக்களில் வைத்துப் பாடி அவனை இன்புறுத்துவது வழக்கம். ஒருகால் அவனுடைய ஆற்றலின் பெருமை அளவு கடந்து விளங்குவதைச் சிறப்பித்து,

"நீர்நிலம் தீவளி விசும்போடு ஐந்தும்
அளந்து கடையறியினும் அளப்பருங் குரையைநின்
வளம்வீங்கு பெருக்கம் இனிது கண்டிகுமே"

என்று பாராட்டி

"மன்னுயிர் புரைஇய வலன்ஏர்பு இரங்கும்
கொண்டல் தண்டளிக் கமஞ்சூல் மாமழை
காரெதிர் பருவம் மறப்பினும்
பேரா யாணர்த்தால்; வாழ்கநின் வளனே" (பதிற். 24)

என்று வாழ்த்தினர். வாழ்த்துந்தோறும் குட்டுவன் அவர்க்குப் பெரும்பொருள் நல்கிச் சிறப்பித்தான்.

வேந்தனது நட்பும் அவன் தந்த பொருளும் கோதமனார் வாழ்வை வளம்படுத்தி இன்பவாழ்வாக மலரச் செய்தன. அவரது உள்ளம்,

[1] பதிற். 22.

இம்மையில் நுகர்ந்துமகிழும் இவ்வின்பம் மறுமையிலும் தொடர்ந்து நிலவவேண்டுமென அவாவிற்று. அதனைப் பெறுவது வேண்டிய ஒரு பத்து வேள்விகளைச் செய்தல வேண்டும்; அவற்றை முடிடின் நி முடிப்போர் தம் மனைவியுடன் உடம்போடே விண்ணுலகு செல்வர் என்பது வேதநூல் முடிவுபோலும். அதனால் அவர் செல்கெழுகுட்டு வன் உதவிய செல்வத்தைச் சிறப்புறக் கொண்டு ஒன்பது வேள்வி களைச் செய்தார். அவற்றைக் கண்ட சான்றோரும் வேந்தனும் அவ ரைப் பெரிதும் பாராட்டினர். வேந்தன் செய்த உதவியை நினைந்த கோதமனர், அரசியுடன் நின்ற குட்டுவனை நோக்கி

"திருமுகத் தலமரும் பெருமதர் மழைக்கண்
அலங்கிய காந்தள் இலங்குநீர் அழுவத்து
வேயுறழ் பணைத்தோள் இவளோடு
ஆயிர வெள்ளம் வாழிய பலவே" (பதிற்-21)

என்று வாயார வாழ்த்தினர். அப்போது அவன், கோதமனரை நோக்கி, "நீர் வேண்டியது கொண்மின்" என்றான். "யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகவேண்டும்" என்று கோதமனர் கூறி, அவன் உதவியால் பத்தாம் வேள்வியைச் செய்தார்; வேள்வி நடை பெறுகையில் கோதமனரும் அவர் மனைவியாரும் மறைந்தனர். யாவ ரும் வியந்து வேள்வியை நிறைவுசெய்தனர்.

சின்னாட்குப் பின் கோதமனரோடு உடனிருந்து குட்டுவன் அர சவையைச் சிறப்பித்துக்கொண்டிருந்த நெடும்பாரதாயனர் துறவு பூண்டு காடு சென்றார். துறவு நெறியிற் செல்வோரைத் தடுத்தல் நேரிதன்று என்பர். அதனால் வேந்தனும் அவன் சுற்றமும் வாழ்த்த அவர் காடுசென்றார்; அதுகண்ட செல்கெழுகுட்டுவனுக்கும் துறவின் மேல் உள்ளம் சென்றது. குறித்த நாள் ஒன்றில் குட்டுவனும் துறவு மேற்கொண்டு காடுசென்றான். அவன் இருபத்தைந்து யாண்டு அரசு வீற்றிருந்தான் எனப் பதிற்றுப் பத்தின் பதிகம் கூறுகிறது.

சங்க காலத்தில் தமிழ் வளர்ந்த முறை

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள், தமிழ்ப்பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

மூவகைத் தமிழ்

மனிதன் உரைநடையிலும் செய்யுள் நடையிலும் செய்திகளை அறிகின்றான். இவ்விரண்டும் இயல் எனப்படும். பண் இசைத்துத் தாள வரையறை செய்து பாடப்படுவதும் ஒரு வகை. அது இசை எனப்படும். இயலும் இசையும் கலந்து காண்பார் கண்களுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்க வல்லதாய் நடித்துக் காட்டப்படுவது நாடகம் எனப்படும். இம்மூன்றும் ஒவ்வொரு மொழியிலும் அமைந்துள்ளன. ஆனால் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன்னரே மொழியை இங்ஙனம் மூன்று பிரிவுகளாகப் பிரித்து வளர்த்த பெருமை தமிழ் ஒன்றுக்கே உரியது என்பது தவறாகாது. அப் பண்டைக் காலத்தில் தமிழ் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என மூன்று பிரிவுகளாக வகுக்கப் பட்டிருந்தது. இயற்றமிழில் வல்லவர் புலவர் என்றும், இசைத் தமிழில் வல்லவர் பாணர், பாடினியர் என்றும், நாடகத் தமிழில் புலமை பெற்றவர் கூத்தர், கூத்தியர் என்றும் பெயர் பெற்றிருந்தனர்.

முத்தமிழ்ப் பயிற்சி

இக்காலத்தில் இருத்தலைப் போலச் சங்க காலத்தில் கல்லூரிகள் இருந்தன என்று துணிந்து கூறுதல் இயலாது. ஆயினும், நாட்டின் மொழியாகிய தமிழை நலமுறக் கற்பிக்க எண்ணிறந்த திண்ணைப் பள்ளிகளோ உயர்நிலைப் பள்ளிகளோ இருந்திருத்தல் வேண்டும் என்பது எள்ளளவும் ஐயமில்லை. இயற்றமிழ்ப் பள்ளிகள் மிகப் பலவாக இருந்திருத்தல் வேண்டும்; இசைத்தமிழ்ப் பள்ளிகள் பல இருந்திருத்தல் வேண்டும். இங்ஙனமே நாடகத் தமிழ்ப் பள்ளிகளும் நன்முறை

யில் நடைபெற்றிருத்தல் வேண்டும். இவை இருந்திராவிடில், நானூற்றுக்குமேற்பட்ட இயற்றமிழ்ப் புலவர்களையும் எண்ணிறந்த இசைவாணர்களையும் மிகப்பலவாகிய கூத்தரையும் சங்ககாலம் பெற்றிருக்க வழி இல்லை.

இயற்றமிழில் வல்ல புலவர்கள் எண்ணிறந்த இலக்கண நூல்களையும் மிகப்பல இலக்கிய நூல்களையும் கற்றவர். இசைத்தமிழ்ப் புலவராகிய பாணர்களும் பாடினியர்களும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழு இசைகளிலும் வல்லவராய் அக்காலத்தில் விளங்கிய சீறியாழ், பேரியாழ், செங்கோட்டியாழ் முதலிய பலவகையாழ்களையும் வாசிக்கும் திறன் வாய்ந்தவராய் விளங்கினர். அக்காலத்துத் தமிழிசை பற்றிய செய்திகள் மிகப்பலவாகும். இன்றுள்ள சிலப்பதிகாரம் முதலிய நூல் உரைகளில் இவைபற்றிய செய்திகள் இருத்தலை நோக்க மிகப்பல இசைநூல்கள் அக்காலத்தில் இருந்திருத்தல் வேண்டுமென்பது ஐயமற விளங்குகிறது. உள்ளக் கருத்தை உடற் குறிப்புகளால் காண்போர்க்கு உணர்த்துவது நடனமும் நாடகமும் ஆகும். இக்கலையில் வல்லவர் கூத்தர் கூத்தியர் எனப்பட்டனர். இக்கலைபற்றியும் பலநூல்கள் தமிழகத்தில் இருந்தன என்பது இன்றுள்ள சங்கத தமிழ் நூல்களால் அறியப்படுகின்றது. உள்ளக் குறிப்பை வெளியில் தெரியும்படி நடிப்பதில் விறல் படைத்தவள் விறலி எனப்பட்டாள்.

தமிழ் வளர்ந்த முறை

படித்துப் புலமை பெற்ற புலவர் பலர் பள்ளி ஆசிரியர்களாய் அமர்ந்தனர். வேறு பலர் முடிமன்னர் அவைகளிலும் சிற்றரசர் அவைகளிலும் அவைப்புலவராக அமர்ந்தனர். பின்னும் பலர், ஊர்தோறும் சென்று பேரிகை கொட்டி வாணிகம் நடாத்திய பேரி செட்டிமார் போலவும் பழமரம் நாடிச் செல்லும் பறவைகளைப் போலவும் தமிழைப் பேணி வளர்த்த தகைசான்ற மன்னர்களை நாடிச் சென்று, தம் புலமையை வெளிப்படுத்தி, அவர் தந்த பரிசிலைப்

பெற்று வாழ்ந்து வந்தனர். அப்பரிசில் தீர்ந்தவுடன் பிறமன்னர் பால் சென்று தம்புகழ் நிறுவிப் பரிசு பெற்று மீண்டு வந்தனர். இத்தகைய புலவர் பெருமக்கள் பாடியனவே சங்ககாலப் பாடல்கள்.

போர்க்களத்தில் வெற்றிபெற்ற அரசர்களைப் புலவரும் பாணரும் கூத்தரும் சென்று பாடுதல் மரபு. விறல் வேந்தர் அம் முத்தமிழ்ப் புலவர்களைப் பாராட்டி அவர் மனம் மகிழும்படி பரிசளித்தல் வழக்கம். சேரன், சோழன் என்னும் முடியுடை அரசர் இருவரையும் அவரோடு இணைந்துவந்த பெருவேளிர் ஐவரையும் தலையாலங்கானத்தில் முறியடித்த பாண்டியன் நெடுஞ்செழியனைக் கல்லாடனார், மாங்குடி கிழார், இடைக் குன்றூர் கிழார் என்ற புலவர் பெருமக்கள் உளமாரப் புகழ்ந்து பாராட்டியுள்ள பாடல்களைப் புறநானூற்றில் காணலாம். வேந்தர்களது வெற்றிச் சிறப்பையும் கொடைச் சிறப்பையும், குண நலன்களையும் புலவர்கள் பாராட்டிப் பரிசு பெற்றனர். அங்ஙனமே தக்க காலங்களில் அவர்களுக்கு அரிய அறிவுரைகளைக் கூறினர். அவர் தம் அறிவுரைகளைப் பாராட்டிய வேந்தர்கள் அவர்களுக்கு மனமுவந்து பரிசளித்தனர். அரசர் இருவருக்குள் போர்நிகழ இருத்தலை உணர்ந்து, அப்போர் நடைபெறுமற் காத்த புலவர்களும் உண்டு. அப் புலவர் பெருமக்களும் பரிசில் பெற்றனர். ஆட்சி முறையிலும் தனிப்பட்ட வாழ்க்கைமுறையிலும் அரசர்க்கு அறிவுரைகூறிய அருந்தமிழ்ப்புலவர்களும் அக்காலத்தில் வாழ்ந்தனர். தன் மனைவியைத் துறந்த பேகனுக்குக் கபிலர் பரணர் முதலிய சான்றோர் அறிவுரை பகர்ந்தனர் என்பதைப் புறநானூற்றில் காணலாம். தம் மன்னனோடு போர்க்களம் புகுந்து, அவனை அவ்வப்போது ஊக்கப்படுத்தி அவனொடு இன்புற்றும் துன்புற்றும் வாழ்ந்த புலவர்களும் உண்டு. கபிலரும ஔவையாரும் இத் துறைக்கேற்ற சான்றோர்.

'புலமை புலமைக்காகவே' என்பது பண்டைக் காலக் குறிக்கோளாகும். மருத்துவர், கொல்லர், கூல வாணிகர், பேரிகை அடித்து வாணிகம செய்தவர், வளமனையைப் பாதுகாத்த காவற் பெண்டிர்,

குயத்தியர், குறத்தியர் முதலிய பலரும் தத்தம் தொழில்களைச் செய்துகொண்டே பெரும் புலவர்களாய்த் திகழ்ந்தனர். இவர்கள் மக்களிடம் காணப்பட்ட வீரம், கொடை, அன்பு, அருள், முதலிய நற்பண்புகளைப் பாராட்டிப் பாடிய பாடல்கள் பலவாகும்.

புலவர்கள் அரசர்பால் பரிசில் பெற்று மீண்டும் தம் ஊர் செல்லும்போது, வள்ளல்களை நாடிச்செல்லும் புலவர்களை வழியில் சந்திப்பதுண்டு; உடனே அவர் தம் வறுமையைப் போக்க விழைந்து, அவர்களைத் தமக்குப் பரிசில் ஈந்து மகிழ்ந்த மன்னர்பால் ஆற்றுப்படுத்துதல் வேண்டும்; தமக்குப் பரிசில் தந்த மன்னனுடைய சிறப்பியல்புகள், அவனது அரண்மனைச்சிறப்பு, நாட்டுச்சிறப்பு, நகரச்சிறப்பு அங்காத்திற்குச் செல்லும் வழிபற்றிய விவரங்கள் இன்ன பிறவற்றைப் பரிசில்பெற்று மீளும் புலவர், வழியில் காணப்பட்ட புலவர்க்கு விரித்துரைத்து, அவரை அவ் வள்ளல்பால் ஆற்றுப்படுத்தல் ஒரு நீண்ட பாவாக அமையும். இங்ஙனம் அமைந்த பாட்டு புலவர் ஆற்றுப்படை எனப்படும். இங்ஙனமே பாணரை ஆற்றுப்படுத்தலும் உண்டு. அது பாண்ஆற்றுப்படை எனப்படும். இவ்வாறே விறலியை ஆற்றுப்படுத்தலும் உண்டு. அது விறலிஆற்றுப்படை எனப்படும். இப்படியே கூத்தரை ஆற்றுப்படுத்தலும் வழக்கம். அது கூத்தர் ஆற்றுப்படை எனப் பெயர் பெறும். இத்தகைய ஆற்றுப்படைப் பாடல்களைப் பத்துப்பாட்டில் காணலாம். புறநானூற்றிலும் பல பாடல்கள் உண்டு.

முடிவுரை

இங்ஙனம் புலவர், பாணர், கூத்தர் என்னும் முத்தமிழ்ப் புலவர்களும் தம்முள் மனமொத்து வாழ்ந்தமையாலும், இவர் தம் சிறந்த புலமையினையும், ஒழுக்கத்தையும், தாய்மொழிவளர்ச்சியின் தன்மையையும் மன்னர்கள் கண்டு மகிழ்ந்து பரிசளித்தமையாலும், அவைப் புலவர் என்னும் முறையில் நிலையாகப் புலவர் பலரைப் பாதுகாத்து வந்தமையாலும் சங்ககாலத் தமிழகத்தில் நமது தாய்மொழி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது.

மொழியாராய்ச்சி

சித்தாந்த கலாநிதி-பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை, மதுரை.

ஒவ்வொரு நாட்டிலும் வாழ்கின்ற மக்கள் தங்கள் பேச்சு வழக்கில் நிலவும் மொழியின்பால் மிக்க அன்பு செலுத்துகின்றனர். ஆங்கில நாட்டவர் தங்கள் மொழியின் உயர்வைக்குறித்துப் பேசுமிடத்து, "எங்கள் மொழி அரசனுடைய மொழி" என்று கூறுவர். அதனை வழுப்பட எழுதினும் பேசினும், "அரச மொழியை இகழ்வதாக" எண்ணுவர். வடமொழியாளர், தங்களுடைய வடமொழி தேவர்கள் பேசும் மொழியென்றும், அதுவே ஏனை எல்லாமொழியினும் தொன்மை வாய்ந்தது என்றும், அதனைத் தேவாதி தேவனான இறைவன் உண்டாக்கினான் என்றும் கூறுவர். இவ்வாறே உலக நாடுகளில் வாழும் மக்களினம் யாவும் தத்தம் மொழியே உயர்ந்தது, தொன்மையானது என்பதற்கு ஏற்ற செய்திகளை எடுத்துக் கூறும்.

இரண்டாயிரத்து ஐஞ்ஞூறு ஆண்டுகட்கு முன் மேலைநாடுகளில் ஆசியா மயினர் எனப்படும் நிலப்பகுதி அந்நாளில் மேன்மை யுற்று விளங்கிய கிரேக்கரது ஆட்சியில் இருந்தது. கிரேக்கர் பலர் அப்பகுதியில் குடியேறி யிருந்தனர். அக் குடியேற்றப் பகுதியில் அலிகாரனசசு என்பது ஒன்று. அங்கே வாழ்ந்த கிரேக்கர் குடும்பங்களுள் சிறந்ததொன்று கல்வி கேள்விகளில் உயர்ந்து விளங்கிற்று. அதில் தோன்றிய சான்றோர்களுள் எரோடோட்டசு என்பவர் நல்ல புலமை நிரம்பியவர்; இளமையில் சீரிய கல்வியும் இசையும் பயின்றதோடு மற்போர்ப் பயிற்சியும் நன்கு பயின்றிருந்தார். ஆண்டு முதிர முதிர எரோடோட்டசு பரந்துபட்ட நூற்கடலிற் படிந்து படிப்பதையே பெருந்தொழிலாகக் கொண்டார்.

சில ஆண்டுகட்குப் பின் குடும்பத்தொல்லை காரணமாக எரோடோட்டசு தமது அலிகாரனசசு என்ற இடத்தின் நீங்கிச் சாமோசு என்ற இடத்துக்குச்சென்று அங்கே தங்கினார். அப்போது வரலாற்று நூல் ஒன்றை எழுதத் தொடங்கினார். பின்பு அவர்க்கு வெளிநாடு

சென்று காணும் வேட்கை யுண்டாயிற்று. தமது முப்பத்தேழாம் ஆண்டில் ஏதெனிசு நகரத்தில் இருந்து நல்லாட்சி செய்து சிறப்பு மிக்கிருந்த பெரிக்கிலிசு என்ற வேந்தனது ஆதரவுபெற்று ஐந்தாறு ஆண்டுகள் அந் நகரத்தே தங்கினார். அங்கே அப்பொழுது வாழ்ந்த அறிஞர் பலருடைய நட்பும் ஆதரவும் அவர்க்குக் கிடைத்தன. அவர்களுடைய பேரவையில் எரோடோட்டசு தாம் எழுதிய வரலாற்றைப் படித்துக் காட்டினார். அதனைக் கேட்டுப் பெருமகிழ்ச்சி கொண்ட ஏதெனிசு நகரப் பெருமக்கள் அவர்க்குப் பொற்கிழி யொன்று பரிசு நல்கினர். ஏதெனிசு நகரவாழ்வு பெரும்பொருளுடையார்க்கே இனிதாக அமைவது கண்டு, அதனின் நீங்கி இதாலிநாட்டுத் தூரியம் என்ற பேரூரில் அவர் தங்குவாராயினர். அங்கே இருந்தபோது தாம் மேற்கொண்ட வரலாற்று நூலை எழுதி முடித்தார். பின்பு ஒருகால் அவர் ஏதெனிசு நகரத்துக்குப்போந்து, அதன்சிறப்பைக் கண்ணாரக்கண்டு களித்தார். சில ஆண்டுகட்குப்பின் தூரியம் என்னும் நகரத்தை அடைந்து அறுபதாம் ஆண்டளவில் எரோடோட்டசு இவ்வுலக வாழ்வை நீத்தார். அவரது வரலாற்றுநூலில் மொழித் தொன்மை கண்ட குறிப்பு ஒன்று குறிக்கப் பெறுகிறது.

எகிப்துநாட்டில் சம்மெடிக்கசு என்ற வேந்தன் ஆட்சிபுரிந்து வருகையில், அந் நாட்டவர், மக்களினத்துள் தாமே தொன்மையானவர் என்றும் தமது மொழியே தொன்மை வாய்ந்தது என்றும் கருதியிருந்தனர். அந் நாளில் பிரிஜியர் என்றோர் இனத்தவர் அங்கே வாழ்ந்தனர். அவர்களும், எகிப்தியர் போலவே தொன்மை வாய்ந்தவர் என்றனர். உண்மையைக் காணவேண்டுமென்ற முயற்சி வேந்தன்பால் மிகுந்து நின்றது. அவன் பலவேறு முயற்சிகளையும் ஆராய்ச்சிகளையும் செய்தான். ஒன்றாலும் அவன் உள்ளம் தெளிவுபெறவில்லை. முடிவில் அவன் ஒரு நல்ல ஆராய்ச்சியை மேற்கொண்டான்.

காட்டுப்புறங்களில் வாழும் மக்களிடையே ஆடு மாடு மேய்க்கும் ஆயரினத்து ஒருவனிடம், பிறந்த மொழிபயிலாத பச்சிளங் குழவிகள் இரண்டினைத் தந்து, மக்கள் வழங்காத தனித்த ஒருவீட்டில் இருத்தி வளர்ந்துவரச் செய்தான். அக் குழவிகள் காதில் மக்கள் பேசும் பேச்

சொலி விழாதவாறு காவல் வமைக்கப்பட்டது. உணவு வேளையில் ஆடு ஒன்றை அக்குழந்தைகட்கு அனுப்புவர்; அக்குழவிகள் ஆட்டின் மடியில் தாமாகவே பாலை உண்ணும். மொழி வழங்கும் காலம் வரும் போது அக் குழவிகள் வாயில் பிறக்கும் மொழி எதுவோ அம் மொழியே மக்களினம் பேசும் மொழிகளுள் பழமையானது என்றும், அதனைப் பேசும் மக்களே பழம் பெருமக்கள் என்றும் வேந்தன் முடிவு கொண்டான். இந்தப் பாதுகாப்பில் இரண்டாண்டுகள் கழிந்தன.

குறித்தநாளில், வேந்தன் அறிஞர்சூழ அவ் வீட்டுக்குச்சென்று அதன் வாயிலைத் திறந்தான். உடனே அக்குழந்தைகள் தம் கைகளை நீட்டிக்கொண்டு பேரவாவுடன் அவர்களைநோக்கி ஓடிவந்து 'பிகேபிகே' என்றன. முதற்கண் அவர்கட்கு அம் மொழியின் பொருள் விளங்க வில்லை; இரண்டொரு நாட்களுக்குப்பின் அவர்கள் அக் குழந்தைகள் 'பிகே' என்ற மொழியால் உணவைக் குறிப்பது கண்டனர். அதனை ஆயர்கள் அரசனுக்கு அறிவித்தனர். பின்னர், சம்மேடிக்கசு, உண வுப் பொருளைக் குறிக்கும் 'பிகே' என்ற சொல், எந்த மக்கள் பேசும் மொழியில் உளது எனக் காணத் தலைப்பட்டான. முடிவில் பிரிஜியர் கள் எனப்படும் மக்களினத்தவர் உணவைப் புகா என வழங்குவது கண்டான். பின்பு, அதன் உண்மையை எகிப்தியர்கள் உணர்ந்து அப் பிரிஜியர்களே தம்மினும் தொன்மையுடைய மக்கள் என்று உடன் பட்டான்.

சம்மாட்டிகசு வேந்தன் மொழித்தொன்மைகண்ட ஆராய்ச்சியில், பச்சிளங் குழவிகள் இரண்டினையும் வளர்த்தற்கு மகளிர் சிலரை விடுத் திருந்தான் என்றும், அவர்களது மொழி அக் குழவிகள் தெரிந்து கொள்ளாவாறு அவர்களுடைய நாவை அறுத்து ஊமையாக்கி யிருந் தான் எனவும் கிரேக்கர்கள் கூறுவர் என்று எரோடோடசு உரைக் கின்றார். இந் நிகழ்ச்சி மொழியாராய்ச்சிக்கு அமைந்த நெறிகட்கு ஒத்ததே என அறிஞர் உடன்படுகின்றார்கள்.

இதே ஆராய்ச்சி முடிவை நமது நாட்டில் நிலவும் "தேவ பாடை" உளப்பட்ட மொழிகளில் வைத்து நோக்கின், தமிழ் மொழி பொன்

தில் தான் உணவுப் பொருளைக் குறிக்கும் சொற்களுள் புகா என்றொரு சொல் காணப்படுகிறது. தொல்காப்பியத்தில் உணவுக்காலத்தில் புகுதரும் விருந்தினரை, "புகாக்காலைப் புக்கவிருந்து" (தொல். பொ. 107) என்று ஆசிரியர் குறிக்கின்றார். அஞ்சியார் என்ற சான்றோர் ஒருவர், உணவுப் பொருளான சோற்றுக் கஞ்சி தோய்த்த உடையை, "புகாப் புகர் கொண்ட புன்பூங் கலிங்கம்" (நற். 90) என்று வழங்குகின்றார். இவ்வாறே, அகப்பாட்டுக்களில் தாயங் கண்ணனார் என்ற சான்றோர், நிணங்கலந்த சோற்றுணவை "வானிணப் புகவு" (அகம். 132, 21.) என்று உரைத்துள்ளார். இவ்வாற்றால் புகா, புகவு என்ற சொற்கள் இரண்டாயிரத்து ஐஞ்ஞூறு ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த பிரிஜியர் மொழியில் கண்ட "பிகே" என்ற சொல்லின் இனமாகக் காட்சி தந்து மொழித் தொன்மைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக இருப்பதை அறிஞர்கள் உணர்வார்களாக. உண்மை இவ்வாறு இருக்க நாட்டில் சில்லாண்டுகட்கு முன் தோன்றிய மொழிகட்கு ஏற்றமும் முதலிடமும் தந்து பாராட்டும் அறிவுடை உலகமும் அரசியல் உணர்வும் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பு தோன்றி இன்றும் நிலவி என்றும் விளங்குதற்கேற்ற வன்மையும் வளமையும் கொண்ட தமிழ் மொழியை நினையாது புறக்கணித் தொழுகுவது வியப்பாக இருக்கிறதன்றோ!

தமிழ் இனம்

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள், தமிழ்ப் பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

இனவாழ்வின் உயிர்நாடி

ஒரு மொழி பேசும் மக்கள் தொகுதியை 'இனம்' என்னும் சொல்லால் குறிக்கலாம். இதன்படி 'தமிழ்' என்னும் மொழியைப் பேசும் மக்களைத் 'தமிழ்இனம்' என்னும் தொடரால் குறிப்பது பொருந்தும். இவ்வொரு மொழி பேசும் மக்கள் இனம் வன்மைபெற்றதாக விளங்க வேண்டுமாயின், அவ்வினத்தைச் சேர்ந்த மக்கள் இயற்கையாய் அமைந்த இனவாழ்வு உடையவராக இருத்தல் வேண்டும். அஃதாவது, அவ்வினத்தைச் சேர்ந்த அனைவரும் ஒருதாய் ஈன்ற மக்களைப் போல வாழ வசதி இருத்தல் வேண்டும். உழைப்பால் எவரும் இனவாழ்வில் எத்தகைய உயர் நிலையையும் அடையத்தகும் வசதி அவ்வினத்தில் அமைந்திருத்தல் வேண்டும். இதனை மேலும் விளக்கிக் கூறவேண்டுமாயின், ஓர் மொழி பேசும் மக்கள் சேர்ந்துவாழும் இனவாழ்வில் பிறவி கொண்டு பிரிக்கப்படும் பாகுபாடுகள் இருத்தல் கூடாது. அவரவர் தம் முயற்சியால் உயர்ச்சி பெறலாம் என்னும் இன வாழ்விற்கு உயிர் நாடியான அடிப்படை இனவாழ்வில் அமைந்திருத்தல் வேண்டும்.

மேனுடுகளில் இனவாழ்வு

இவ்வினவாழ்வின் உயிர் நாடி நன்கு அமையப் பெற்ற காரணத்தால்தான் மேல்நாடுகள் அறிவிலும் ஆற்றலிலும் நம்மால் எண்ணிப் பார்க்க முடியாத அளவில் முன்னேறி வருகின்றன. அந் நாடுகளில் பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை. அதனால் செருப்புத் தைக்கும் சக்கிலி, தூண்டில் போட்டு மீன்பிடிக்கும் எளிய மகன், செங்கல்லடுக்கும் சிற்றாள், பயிர்க் கொல்லையைக்காக்கும் பணிமகன் போன்றவரும் உழைப்பால் உயர்ந்து அரியணையில் அமர்ந்து ஆட்சிசெய்தலைக் காண்கிறோம். அங்கு ஒவ்வொருவரும் அடுத்தவரைத் தம் இனத்தவராக

வும் நாட்டவராகவும் கருதிப் பண்புடன் நடந்துகொள்ளும் பழக்கம் பெற்றுள்ளனர்.

இத்தகைய இனவாழ்வு நம் நாட்டில் இல்லாமைக்குக் காரணம் யாது? இந் நாட்டில் பலவகை உட்பிரிவுகள் உட்படப் பல்லாயிரக் கணக்கான சாதிகள் இருக்கின்றன என்று கூறுதல் தவறாகாது[1]. எந்த நாட்டிலும் மக்கள் பல தொழில்களைச் செய்தல் இயல்பு. ஆயின், ஒவ்வொரு தொழிலைச் செய்வோரும் பிறவியிலே வேறுபட்ட சாதியினராகக் கருதப்படும் இழிநிலை பிறநாடுகளில் காணப்படாதது. ஆனால், இந் நாட்டில் தொழில் காரணமாக ஏற்பட்ட பெயர்கள் சாதிப் பெயர்களாக நிலைநிறுத்தப் பட்டன.

வட இந்தியாவில்

இந் நாட்டில் குடிபுகுந்த ஆரியர் சாதிப் பிரிவினை அறியாதவர். ரிக்வேதகாலத்தில் அவர்களிடம் சாதிப்பிரிவுகள் இல்லை. ஆயின், பிற்பட்ட காலங்களில் அவர்கள் உயர்வு கருதிப் பிரிந்து வாழ்ந்தனர். கொடுக்கலும் வாங்கலும் படிப்படியாக நிறுத்தப்பட்டன. பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் என்னும் முப்பிரிவினைகள் தோன்றின. அவர்களிடையே இருந்த பலவகைத் தொழிலாளர்கள் நான்காம் பிரிவினராயினர். நாளடைவில் ஆரியரால் ஆளப்பட்ட இந் நாட்டிற்குரிய மக்களும் சூத்திரராக்கப் பட்டனர்.

---

[1] "The elaborate institution known as the caste system among the Hindus in India may almost said to be without a prallel in the world.... To day caste is rigidly fixed by birth and exclusive commensality and couration between the members of a caste-group to the exclusion of all others are its fundamental and outstanding charecteristics. Further the conception of impurity communicable to a high caste by contact with a lower underties this fissiparous tendency, and was resulted in the untochalibity of the so-called sudra who by popular error is almost identified with the Panchama or one outside the frafomework of the chathurvarnya, Again, in the place of the four original varnas or class groups, there are to-day, thousands of caste divisions and snb-divisions and the number is still growing".—

"The Vedic Age" R. C. Majumdar, pp 384-5.

தமிழகத்துப் பிரிவுகள்

இங்ஙனம் வட இந்தியாவில் உண்டான சாதிப் பாகுபாடுகள் அதே காலத்தில் தென்னிந்தியாவில் காணப்படாதனவாக இருந்தன. தமிழகம் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற ஐந்து நிலங்களாகப் பிரிந்திருந்தது. குறிஞ்சி நிலத்து மக்கள் பொருப்பன், வெற்பன், சிலம்பன், குறத்தி, கொடிச்சி, குறவன், கானவன் எனப் பெயர் பெற்றனர். பாலைநில மக்கள் விடலை, காளை, மீளி, எயினன், எயிற்றி, மறவன், மறத்தி எனப் பெயர் தாங்கினர்; முல்லைநில மக்கள் தோன்றல், மனைவி, கிழத்தி, இடையன், ஆயன், ஆய்ச்சி எனப் பெயர்கள் வழங்கப் பெற்றனர். முல்லை நிலம் ஐந்து நிலங்களுக்கும் இடையே அமைந்திருந்த காரணத்தால், இடை நிலத்தார் என்னும் பொருள்பட முல்லைநில மக்கள் இடையர் எனப் பெயர் பெற்றனர். மருத நிலத்து மக்கள் ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி, உழவன், உழத்தி எனப் பெயர் பெற்றனர். நெய்தல்நில மக்கள் சேர்ப்பன், புலம்பன், பரவன், பரத்தி, நுளையன், நுளைச்சி, அலவன், அலத்தி எனப் பெயர் பெற்றனர். இவ்வொவ்வொரு நில மக்களுள்ளும் தலை மக்கள், பொது மக்கள் என்ற இரண்டே பிரிவுகள் உண்டு. அரசனும் குடிமகனும் என்னும் பிரிவைப்போல இப்பிரிவுகள் அமைந்திருந்தன.

அலுவல் முதலியன பற்றிய பிரிவுகள்

ஆட்சிமுறை அமைந்த பின்னரே நகரங்களிலும் சிற்றூர்களிலும் இக்காலத்தைப் போலவே, அலுவல் காரணமாக அலுவற் பெயர்கள் வழங்கலாயின. அரசு செய்பவன் அரசன்; அரசன் மெய்காப்பாளராக இருப்பவர் அகம்படியர்; மறம்-வீரம், வீரத்தையுடையவர் மறவர்; படையை ஆட்சி புரிந்தவன் படையாட்சி; இவனே நாயக்ன் (நாயகர்) எனப் பெயர் பெற்றான். பறை-இச் சொல் மலையாளத்தில் 'சொல்லுதல்' என்ற பொருளைத் தரும். அரசன் ஆணையை மாநகரத்தார்க்குப் பறையறைந்து சொல்லுபவன் பறையன்; வண்ணம் - அழகு; அழுக்கு ஆடைகளை அழுக்குப் போக்கி வண்ணம் செய்பவன் (அழகு செய்பவன்) வண்ணத்தான் அல்லது வண்ணான் எனப் பெயர் பெற்றான். சலவைத் தொழிலாளிக்கு 'வண்ணத்தான் என்ற பெயர் வழக்கு இன்னும் மலையாள நாட்டில் உண்டு.

தாளாண்மை என்பது 'முயற்சி' என்னும் பொருளை உடையது. வறிய நிலத்தில் நீர்பாய்ச்சிப் பதப்படுத்திக் கலப்பைகொண்டு உழுது எருப்போட்டு வயலைப் பக்குவப் படுத்தி விதைகளை விதைத்து......, அறுவடை செய்யும் வரை உழவன் மேற்கொள்ளும் முயற்சி அளவிடற்கரியதன்றோ? அவனிடம் தாளாண்மை இல்லையாயின் ஓரினத்தின் வாழ்வே கெட்டுவிடுமன்றோ? இத்தகைய முயற்சியுடையவன் 'தாளாளன்' எனப்பெயர்பெற்றான். தாளாண்மையால்வந்த பொருளை அவன் பிறர்க்கு உதவும் நிலையில் வேளாளன் எனப்பட்டான். (வேளாண்மை-உதவி) உயிரைத்துரும்பாகமதித்துப் பலகல்தொலைவு ஆழந்தெரியாத கடலில் கட்டுமரங்களைச் செலுத்தி மீன் பிடித்து வாழ்ந்த மனிதன் 'கடலரசன்' எனப் பாராட்டப்பட்டான். அவனே கடற்கரையில் வாழ்ந்த காரணத்தால் 'கரையான்-கரையாள்-கரையாளன்' என்னும் பெயர்களைப் பெற்றான். பரவை-கடல்; பரவன்-கடலன்; கடலருகில் வாழ்பவன், கடலில் வாழ்பவன், கடலைக் கொண்டு வாழ்பவன் 'பரவன்' எனப் பெயர் பெற்றான்; மலையில் வாழ்ந்தவன் 'மலையன்' என்றும், காட்டில்வாழ்ந்தவன் 'காடன், காடவன்' என்றும், ஊரில் வாழ்ந்தவன் 'ஊரன்' என்றும் பெயர் பெற்றனர். ஊரை யாண்டவன் 'ஊராளி' எனப்பட்டான். சேனைத்தலைவனான தமிழன் 'நாயன்' என்வும், 'நாயகன்' எனவும், தெலுங்கன் 'நாயடு' என்றும் சேரநாட்டான் 'நாயன்' (நாயர்) என்றும் பெயர் பெற்றனர். பலவகை ஆடைகளுள் 'தேவாங்கு' என்னும் ஒருவகை ஆடையை செய்தவர் 'தேவாங்கர்' எனப்பட்டனர். செக்காட்டி எண்ணெய் எடுப்பவன் 'செக்கன்' எனப்பட்டான். கடலில் முக்கி (மூழ்கி) த் தொழில் செய்பவன் 'முக்குவன்' எனப்பட்டான். வேட்டையாடுபவன் 'வேட்டுவன்' எனப்பட்டான்; கஞ்சம்-பித்தளை; கஞ்சத்தால் வேலை செய்பவன் 'கஞ்சான்' எனப் பட்டான். இராசிகளைக் கணித்துச் சோதிடம் கூறியவன் 'கணியன்' எனப்பட்டான். வேல் ஏந்தி வெறியாடியவன் 'வேலன்' எனப் பெயர் பெற்றான். பண் இசைத்துப் பாடினவன் 'பாணன்' எனப் பெயர் பெற்றான். செருப்புத் தைத்தவன் 'செருமான்' எனப்பட்டான். குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்தவன் 'குறிச்சியான்' என்று அழைக்கப் பட்டான்.

ஒவ்வொரு தொழிலியற்றும் கூட்டத்தார்க்கும் ஒரு தலைவன் உண்டு; அவன் இடத்திற்கு ஏற்ப மூப்பன் என்றும், மூத்தன் என்றும், முதலி என்றும் பெயர் பெற்றான். வீரர்களின் போர்த் திறமையைப் பாராட்டி அரசர்கள் வீரர்களுக்கு 'அரையன்' 'வாவரையன்' என்னும் பட்டங்களை வழங்கியதும், அப் பட்டங்கள் நாளடைவில் 'ராயன்' என்றும், 'மாராயர்' என்றும் வழங்கலாயின. 'ஜனபா' என்பது கோணிப்பை செய்வதற்குரிய ஒருவகைச் செடி. அச்செடி தரும் சணலைக்கொண்டு கோணிசெய்பவர் 'ஜனபர்' (ஜனபசெட்டிமார்) எனப் பட்டனர். இவ்வாறு அலுவல் பற்றியும், இடம் பற்றியும், சிறப்புப் பற்றியும் வந்த பெயர்கள் எண்ணில. இவற்றை மேலும் அறியவிரும்புவோர் தமிழிலக்கிய அறிவோடு சேரநாட்டுச் சாதிப் பெயர்களையும் அங்கு வழக்கிலுள்ள பிறபெயர்களையும் உணர்ந்து ஆராய்தல் நலமாகும்.[1]

பிற்காலத் தமிழகத்தில்

இங்ஙனம் தொழில் பற்றியும், இடம்பற்றியும் சிறப்புப்பற்றியும், தோன்றிய பெயர்கள், நாளடைவில் எவ்வாறோ பிறவிபற்றியவை ஆகிவிட்டன. சாதிகளையொழித்துச் சமுதாயத்தை ஒருநிலைக்குக் கொண்டுவர முயன்ற பௌத்த சமயமும், சமண சமயமும், நாட்டில் வீழ்ச்சியுற்றன. வடக்கே ஆட்சியிலிருந்த "ஒரு குலத்துக் கொரு நீதி', கூறும் மனுதர்மசாத்திரம் தென்னாட்டிலும் கால்கொண்டது. மனுநீதி முறைப்படி இந் நாட்டை ஆண்டதாகப் பெருமை பேசிக்கொண்ட மன்னர்கள் தென்னிந்திய வரலாற்றில் இடம் பெற்றுள்ளனர்.

நாயன்மார் காலத்திலும், ஆழ்வார்கள் காலத்திலும் சாதிவெறி தலைதூக்கி யிருந்ததை நந்தனார் வரலாறும், யாழ்ப்பாணர் வரலாறும் திருப்பாணாழ்வார் வரலாறும் ஓரளவு தெரிவிக்கின்றன. சமணத்தையும் பௌத்தத்தையும் ஒடுக்க நேர்ந்த போராட்டத்தில் வைதிகர், சைவர், வைணவர் ஆகிய இந்துக்கள் (இந்து என்பது பிற்காலப் பெயர்) தம்முள் இருந்த சாதிவேறுபாடுகளை ஓரளவு மறந்திருந்தனர், மேற்சொன்ன இரண்டு சமயங்களும் ஒடுக்கப்பட்ட பின்பு, மீண்டும் இவ் வேறுபாடுகள் தலைதூக்கின. இச் சாதி வேறுபாடுகள் சோழப்

[1] Vide Castes of Tribes of S. India and Malabar Gazetteer.

போரசிலும் நிலைபெற்றன. சில சாதியினர் குடிமக்களுக்கு உரிய சில உரிமைகளை இழந்திருந்தனர் என்பதைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

ஒரே இனத்தில் இழிநிலை

தமிழினம் இவ்வாறு எண்ணிறந்த பிறவிபற்றிய சாதிகளாகப் பிரிக்கப்பட்ட காரணத்தால் நாளடைவில் வலிமையிழந்தது; இவ்வலியின்மையே தமிழ் மன்னர் ஆட்சி அழியவும் ஒரு காரணமாகவிருந்தது. கோவிலுக்குள் இன்ன வகுப்பார் இறைவன் கருவறையில் போகலாம். இன்னவர் இடை மண்டபத்தில் இருக்கலாம், இன்னவர் முன் மண்டபத்தில் நிற்கலாம், இன்னவர் முன்மண்டபத்திற்கும் வெளியே நிற்றல் வேண்டும், இன்னவர் கோவிலுக்குள் வரலாகாது, என்றவரையறைகள் ஏற்பட்டன. பொது மக்கள் வரிப்பணம் கொண்டு கட்டப்பட்ட கோயில்களில் பொதுமக்கள் நிலை எவ்வாறாயிற்று. அவரவர் தொழிலின்படி வாழ்க்கை நடத்த வேண்டுமென்ற மனுதர்ம முறைப்படி, மக்கள் இன்று, தகரும் உரிமைகளை இழந்து, வாழ்ந்தனர் என்று கூறுதல் மிகையாகாது. 'கண்டால் தீட்டு' 'தொட்டால் தீட்டு' என்று சொல்லும் அளவிற்கு மனிதன் மனிதனை வெறுத்தான்; நாயினும் கீழாக மதித்தான். உயர் வகுப்பானைக் கண்டவுடன் மற்ற வகுப்பாருள் ஒவ்வொரு சாதியானும் இவ்வளவு தூரத்தில் விலகி இருக்க வேண்டும் என்ற நியதி ஏற்பட்டது. உயர் வகுப்பார் வாழுமிடங்களில் தாழ்ந்த வகுப்பார் வரலாகாது என்றும், அவர் வாழும் தெருக்களில் நடத்தல் கூடாதென்றும் கட்டளைகள் பிறந்தன. இங்ஙனம் பொது மக்கள் நடமாடும் கோவில் முதல் தெருக்கள் ஈறாகவுள்ள எல்லாப் பொதுவிடங்களிலும், ஒரே இனத்தாருக்குள் எண்ணிறந்த பாகுபாடுகள் ஏற்பட்டன. இவ் வேறுபாடுகள், 'இவரைவிட நாம் உயர்ந்தவர்' என்று செருக்குக் கொள்ளப் பயன்பட்டனவே தவிர, இனவாழ்வு அமைதியாக நடத்தப் பயன்படவில்லை. உடம்பின் எல்லா உறுப்புக்

களுக்கும் சமமாகச் செல்லவேண்டும் இரத்த ஓட்டம் தலைக்கும் கழுத்துக்கும் அதிகமாகச் சென்றும், இடைக்கும் கால்களுக்கும் வேண்டும் அளவு செல்லவில்லையாயின், அம் மனிதனுடைய தலையும் கழுத்தும் பருத்துக் காணப்படும்; இடையும் கால்களும் மிகவும் சிறுத்துக் காணப்படும். இத்தகைய மனிதனைப் பிறர் பாராட்டுவாரா? தம்முள் ஒருவனாக ஏற்றுக்கொள்வாரா?

சமய மாற்றம்

இந்தப் பரிதாபத் தோற்றமுடைய மனிதனைப்போலவே பொதுவாக இந்திய இனமும், சிறப்பாகத் தமிழ் இனமும் காட்சி அளித்தன; இந்நிலையில் 'பிறவியினால் உயர்வு தாழ்வு இல்லை' என்று கூறிக்கொண்டு இசுலாம், கிறிஸ்துவம் என்னும் சமயங்கள் இந் நாட்டுக்கு வந்தன. மக்கள் சிலர் மதம் மாறினர்.

தாகூர் கூற்று

தமிழ் இனத்தவருள் இலட்சக் கணக்கான மக்கள் இங்ஙனம் மதம் மாறிய பிறகும், இந்து சமயத் தலைவர்கள் தமது சமயக் குறைபாடுகளை உணர்ந்து திருத்தம் செய்யவில்லை. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இராமலிங்க அடிகள் இச்சாதிகளைக் கண்டித்துள்ளார்; காந்தியடிகள் கண்ணீர்விட்டுக் கதறினர். தாகூர் வருந்திக் கூறியுள்ளதை இங்குக் காண்க.

"இந்து சமயம் தனது சாதிக் கட்டுப்பாட்டினால் வேறுபாடுகள் உண்டாக்கியதே அன்றி ஒற்றுமை உணர்ச்சியை உண்டாக்கவில்லை; சாதிகள் ஒன்றுசேருவதைத் தடுக்க, ஒவ்வொரு சாதிக்குமிடையே நீக்க முடியாத சுவர்களை எல்லைகளாக வைத்துவிட்டது. இதனால் அது தன் மக்களுக்கு அமைதியையும் ஒழுங்கையும் கெடுத்ததே அன்றி, மக்கள் ஒருவரோடொருவர் கலந்து பழகி மனவிரிவு கொள்ள வசதியளிக்கத் தவறிவிட்டது; இதனால் இந்து சமய சமூக அமைப்பு உயிரை இழந்துவிட்டது. அதன் பயனாக, இந்து சமூகம் சிதறுண்டு கிடக்கின்றது. தொழிலும் ஒவ்வொரு சாதிக்கு உரியது என்று கொண்டதனால், இந்த நாட்டுத் தொழில் முறையும் கெட்டுவிட்டது.

தொழில் திறமையைப் பொறுத்ததே யன்றி ஒரு சாதியைப் பொறுத்தது அன்று. இதனால் தொழில் அறிவும் திறனும் கெட்டுவிட்டன.[1]

இன்றைய நிலை

ஆங்கிலக் கல்வியினாலும், பிறநாடுகளில் இத்தகைய சாதிகள இல்லை யென்ற உணர்வினாலும், மக்கள் ஓரளவு சிந்திப்பதாலும், முன்னிருந்த சாதிக்கொடுமைகள் ஓரளவு மறைந்து வருகின்றன. தீண்டப்படாத மக்கள் இன்று ஓரளவு முன்னேறியுள்ளனர்.

நாம் செய்ய வேண்டுவன

தமிழினத்தின் உயிர் நாடிக்கே உலை வைக்கும் இச் சாதி வேறுபாடுகள் பிறநாடுகளில் இல்லாமையால், இயற்கையில் உண்டானவை அல்ல. எனவே, இவை செயற்கையில் உண்டானவை என்பது தெளிவு. ஆதலின் இனவாழ்விலிருந்து அகற்றுவதே தமிழர் நல்வாழ்விற்கு அடிப்படையாகும். இதை எங்ஙனம் நடைமுறைக்குக் கொண்டுவர முடியும்? தமிழ் மக்கள் அனைவரும் இக் கேடுகளை நன்குணர்ந்து, சாதிவேறுபாடுகளை விட்டொழித்தல் நல்லது. கல்வி அறிவற்ற மக்கள் பெரும்பாலராக உள்ள தமிழினத்தில் இஃது எளிது நடைபெறாது. ஆதலால் பொறுப்புள்ள அரசாங்கம் சட்டத்தின் மூலமாக இவ் வேறுபாடுகளைக் களைதலே பொருத்தமாகும். "ஒன்றே குலம்; ஒருவனே தேவன்" என்ற திருமூலர் வாக்கு இத் தமிழ்நாட்டில் செயல் முறையில் வரும் நாளே, நமது தமிழகம் உருப்படத் தக்க பொன்னாளாகும்.

---

[1] "In her caste regulations Hinduism recognised differences and not the mutablity, which is the law of life. To avoid collisions among castes she set up bounderies of immovable walls. She thus gave its races peace and order but not expansion of movement. Therefore her social system lost life and India is worshipping the cage of endless compatments which she had manufactured. It is the same with her trade. Different trade and associations were associated with different castes. It is also Hinduism laid all her emphasis upon the law of heredity, ignoring the law of mutation and thus, reduced arts into crafts and genious into skill"

*மதிப்புரை

கம்பராமாயணம் சுந்தரகாண்டம்-இரண்டாம் பகுதி

அண்ணுமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள கம்பராமாயணம் சுந்தர காண்டம் இரண்டாம் பகுதி நமது பார்வைக்கு வந்துள்ளது. கம்பராமாயணப் பதிப்புகள் பிழைப்பட்டனவா யிருத்தலைக் கண்டு பிழையற்ற பதிப்பு ஒன்று வெளியிடுதல் வேண்டும் என்ற ஆர்வம் அண்ணுமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்த காலஞ் சென்ற டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களுக்குத் தோன்றியது. அவர் தம் அரிய முயற்சியால் அண்ணுமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சிக் கூடம் இத்துறையில் இறங்கியது. தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்த கம்பராமாயண ஏடுகள் வரவழைக்கப் பட்டன; செய்யுட்கள் ஒப்புநோக்கப் பட்டன. பாடபேதங்கள் தொகுக்கப் பெற்றன. சிறந்த பாடபேதங்கள் ஏற்றுக்கொள்ளப் பெற்றுச் செய் யுட்களில் இடம் பெற்றன.

டாக்டர் சண்முகஞ் செட்டியாருக்குப் பின்பு, டாக்டர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் துணைவேந்தராக இருந்தபோதே சண் முகஞ் செட்டியார் கனவு நனவாயிற்று. அஃதாவது, அண்ணுமலைப் பல்கலைக் கழக வெளியீடாகச் சுந்தரகாண்டம் முதற்பகுதி அச்சிடப் பெற்றது. அப் பகுதியில் திருத்தம் பெற்ற செய்யுட்கள் யாப்பிலக் கண முறைப்படி சீர் பிரித்துச் செவ்வையாக அச்சிடப் பெற்றன. இங்ஙனம் அச்சிடப்பெற்ற ஒவ்வொரு செய்யுளின் அடியிலும், சாதா ரண மக்களும் படித்துணரும் வகையில், ஒவ்வொரு செய்யுளடியும்

---

* மதிப்புரைக்குப் புத்தகம் அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்பவேண்டும்.

சொல் சொல்லாகப் பிரித்துத் தெளிவாக அச்சிடப் பட்டுள்ளது. அதற்கடியில் சில இடங்களில் அருஞ்சொற் பொருளும், சில இடங்களில் செய்யுளின் கருத்தும் தரப் பெற்றுள்ளன. ஒவ்வொரு படலத்தின் முதலிலும் படலத்தில் கூறப்பெறும் செய்தி தொகுத்துத் தரப் பட்டுள்ளது. செய்யுட்கள் படிப்பவர் வசதிக்காகத் தக்க தலைப்புடன் அச்சிடப் பட்டுள்ளன.

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சிக் கூடத்தினர்க்கு உதவியாகப் பதிப்பாசிரியர் குழு ஒன்று நியமிக்கப் பெற்றது. அக்குழுவின் தலைவராகப் பேராசிரியர் ரா. பி.சேதுப் பிள்ளை அவர்கள் இருந்து வருகிறார்கள்.

இப் பதிப்பாசிரியர் குழுவின் ஒத்துழைப்புடன் பல்கலைக் கழக ஆராய்ச்சி வல்லுநர் பேராசிரியர் ஜி. சுப்பிரமணியபிள்ளையவர்கள் சிறந்த முறையில் இரண்டாம் பதிப்பைக் கொண்டுவந்திருத்தல் பெரிதும் பாராட்டற்பாலது. இவ் விரண்டாம் பகுதியில் பதிப்பாசிரியர் குழுவினர் பணி மிகுந்துள்ளது. பேராசிரியர் மு: இராகவையங்கார், புலவர் மணி நீ. கந்தசாமிபிள்ளை முதலிய அறிஞர்கள் படலச் சுருக்கம் எழுதி நூலைச் சிறப்பித்துள்ளனர். சில படலங்களுக்குக் குறிப்புரையும் வழங்கியுள்ளனர்.

இவ் விரண்டாம் பகுதி 770 பக்கங்களைக் கொண்டது. இவற்றுள் 460 பக்கங்களே சுந்தர காண்டத்தின் பிற்பகுதியாகும். எஞ்சிய 310 பக்கங்கள் பலவகைப் பாட பேதங்கள் கொண்டது. இப் பகுதி சிறந்த காகிதத்தில் சீரிய முறையில் அச்சிடப் பெற்றுள்ளது.

இவ்வரிய முயற்சியில் ஈடுபட்டுள்ள பதிப்பாசிரியர் குழுவினர்க்கும் ஆராய்ச்சிக் கூடத்தினர்க்கும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் வாழ்த்து உரியது. இவ்விரு திறத்தாரும் பிற காண்டங்களையும்

இவ்வாறே வெளியிடல் வேண்டும் என்பது நமது பெரு விருப்பம். இந் நன்முயற்சிக்கு உறுதுணையாகவுள்ள இராசா சர். முத்தையா செட்டியார் அவர்களுக்கும் இன்றைய அவைவேந்தர் திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளையவர்களுக்கும் நமது பாராட்டு உரித்தாகும்.

(டாக்டர்) மா. இராசமாணிக்கனார்.

பிழை திருத்தம்.

சென்றமீ செந்தமிழ்ப் பகுதியில், 204-ம் பக்கம் 14-ம் வரியில், "எற்ப தாக அக் குறிப்புரை காணல் சாலும்" என்றுள்ளது. இதனை "எற்ப அக் குறிப்புரை கிணப்படாமையின், அதனை விடுத்து நல்லுரை காணல் சாலும்;" எனத் திருத்தல் வேண்டும்.

209-ம் பக்கம், திரிந்ததன்றிரிபு அதுவும் பிறிது மென்றல் என்ற தலைப் பின் கீழுள்ள மூன்றுவது வரியில், "பட்டது விகாரத்திற்கு மேலான எழுத் தாகாது" என்றுள்ளது. இதனை, "பட்டது விகாரத்திற்கு மூலமான எழுத் தாகாது"; எனத் திருத்தல் வேண்டும்.

இங்ஙனம்,

பண்டித-சித. நாராயணசாமி,

அறுபத்துமூவர் மடம், திருவையாறு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம்	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
16.	ஸ்ரீ கிருஷ்ணசரித்திரவிமர்சம்	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கனாநூல் (5) இனியநாற்பது (உரை)	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	0	4	0
19.	தேவையுலா	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும் உரையும்	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	0	8	0
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம் ...	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை ...	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை ...	0	3	0
32.	மநீஷாபஞ்சகம் ...	0	8	0
36.	உவமானசங்கிரகம் ...	0	1	0
37.	மாறனலங்காரம் மூ[illegible]	4	8	0
38.	இரட்டைப்புல்லாணிமாலை	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ...	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு...	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
67.	அமிர்தரஞ்ஜநி	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ...	0	8	0
70.	திருச் சிறுபுலியூருலா	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	0	10	0

1. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4-8-0. இதுவரை 51 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்பு[illegible]களை ஒருரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்[illegible]ன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடு[illegible]

S. சிவஸ்வாமி, மானேஜர்.

Printed by Srimathy [illegible] Rajeswara Naganatha Sethupathy Avl., [illegible] T. N Appan Iyengar at the Tami[illegible]ress, No. 54, Tamil [illegible]adura.